1980 பிப்ரவரி 5]

ஆனால், இது வருவாயின் அடிப்படையில் நடத்துகின்ற தொழில் அல்ல. இது நாட்டு மக்களுக்கு மிகவும் தேவையான மருந்தைத் தயாரிக்கின்ற அடிப்படையில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இதற்காக அரசு ஒரு தனியான துறையை அமைத்து நடத்திக் கொண்டு வருகின்றது. வாரியம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

*வினா எண். 45—திரு. கு. ரமணி ; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் சின்கோனாத் தொழிலாளர்களுக்கு மோயார் டிவிஷனில் 1977 டிசம்பரில் புதிய வீடுகள் கட்ட ஆரம்பித்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

(இ) சின்கோனா தோட்ட டிவிஷன்களில் உள்ள தொழிலாளர் வீடுகளுக்கு மின் விளக்குகள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டில் இருபது வீடுகள் கட்டும் வேலை எடுத்துக் கொண்டதில், 10 வீடுகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளன.

(இ) இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சின்கோனா பகுதியிலே மோயார் டிவிஷன் மிகவும் நல்லதொரு நிலைமையில் இல்லாமல், கஷ்டமான பாறைகள் மிகுந்த இடமாக அமைந்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே பெருவாரியான தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடையாது. அங்கே ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் வீடுகள் கட்ட முடியாமல் இருக்கின்றது. அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், 1977லிருந்து 1980 வரைக்கும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான வீடுகளே அங்கே கட்டப்பட்டிருக்கின்றன என்பதை கணக்கில் கொண்டு, இதைத் துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முடிய சுமார் 400 வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு, காரியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்த மோயார் டிவிஷன் பகுதி மிகவும் கடுமையான பாறைகள் மிகுந்த மலைப் பகுதி என்பது. அந்தக் காரணத்தினால், வீடுகள் கட்டுவதற்கு வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்கள் வர மாட்டேன் என்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பெரு மழை, வெள்ளம் வந்த காரணத்தினால், வேலைகள் தடை பட்டு வந்திருக்கின்றன. இவைகளை யெல்லாம் மனதில்கொண்டு மிக விரைவில் வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று துறைக்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருக்கின்றது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 1977லே கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டும், அங்கே வீடுகள் கட்ட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், அந்த கான்ட்ராக்ட்காரர் வீடுகள் கட்டுவதற்கு மரம் தேவை என்று அரசினிடம் அனுமதி பெற்று, அந்த மரங்களை வேறு இடத்திற்கு கடத்திக் கொண்டு போய்விடுகிறார். அதுதான் காரணம். அதன்மீது நானும் அரசுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறேன். அதனால்தான் தாமதம் ஏற்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப் பட்ட கான்ட்ராக்ட்காரர்களுக்குக் கொடுக்காமல், பி.டபிள்யூ.டி. மூலமாக வீடுகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகின்ற தகவல் மிகவும் கடுமையானது. உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உரியது. அதன்மீது அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

பத்திரிகைகளில் அரசு விளம்பரங்கள்.

*வினா எண். 46—திரு. கே. பன்னை சேதுராம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்களை தனியார் ஏஜெண்டுகள் மூலம் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்து வருகிறதா?

(ஆ) அதனால் தனியார் கம்பெனிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கமிஷன் தொகை எவ்வளவு ஆகிறது?

(இ) அதை அரசே, நேரடியாக எடுத்து நடத்த திட்டம் ஏதாவது அரசின் ஆலோசனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) விளம்பர நிறுவனங்களுக்கு அரசு கமிஷன் தொகை எதுவும் கொடுப்பதில்லை.

(இ) இல்லை.